இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
Tirunelveli Edition - 23.09.2023

# துாத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் ஆணையத்தின் அறிக்கை கிடைத்ததா?

**சென்னை, செப். 23–** துாத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமை ஆணையத்தின் புலனாய்வு பிரிவின் அறிக்கை அரசுக்கு கிடைத்துள்ளதா என, சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

கடந்த, 2018ல், துாத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில், துப்பாக்கிச்சூடு நடந்தது. இதில், 13 பேர் பலியாகினர். சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமை ஆணையம் வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

ஆணையத்தின் புலனாய்வு பிரிவு அளித்த அறிக்கை அடிப்படையில் வழக்கை முடித்தது. இதை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில், வழக்கறிஞர் ஹென்றி திபேன் வழக்கு தொடர்ந்தார். மீண்டும் தேசிய மனித உரிமை ஆணையம் விசாரிக்க கோரியிருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின் போது, ஆணையத்தின் புலனாய்வு பிரிவு அளித்திருந்த அறிக்கை, சீலிடப்பட்ட உறையில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு, நீதிபதிகள் நிஷா பானு, என்.மாலா அடங்கிய அமர்வில், விசாரணைக்கு வந்தது.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் அமைத்தது; இழப்பீடு வழங்கியது என, தமிழக அரசின் அறிக்கை அடிப்படையில், வழக்கை முடித்திருப்பதாகவும், ஓய்வு நீதிபதி அறிக்கை அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சீலிடப்பட்ட உறையில் இருந்த அறிக்கைகளை பரிசீலித்த நீதிபதிகள், தேசிய மனித உரிமை ஆணையத்தின் விசாரணை அறிக்கை மற்றும் புலனாய்வு பிரிவின் அறிக்கை, அரசுக்கு கிடைத்துள்ளதா என்று கேள்வி எழுப்பினர்.

இதுகுறித்து பதில் அளிக்க அரசு தரப்புக்கு உத்தரவிட்டு, விசாரணையை, வரும் 27க்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர். அறிக்கை கிடைத்திருந்தால், மேல் நடவடிக்கை குறித்து தெரிவிக்கவும் உத்தரவிட்டனர்.